IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 159 /2012
Deposition of witness for DW1

Name : உமாமகேஸ்வரி

Husband Name : சந்திரன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 23 day of September, 2022.

குறுக்கு விசாரணை

1. என்மீது இவ்வழக்கை யார் போட்டுள்ளார்கள் என்றால் பாபு (எ) ஹரிபாபு. என் அப்பா பெயர் லோகமூர்த்தி. பாபு (எ) ஹரிபாபு மீது என் அப்பா வழக்கு தாக்கல் செய்து அது அ.வ.எண்.358/ 2010-ன் கீழ் மாண்பமை காட்பாடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் 2ம் வாதி பாலமுருகன் என் அத்தை மகன். அவர் சேவூர் கிராமத்தில் வசிக்கிறார். தற்பொழுது என்னிடம் காட்டடப்படும் இவ்வழக்கின் நான் தாக்கல் செய்த எதிர் உரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2. 2ம் வாதி பாலமுருகனுடன் அத்தைமகன் என்ற உறவைத்தவிர வேறு என்ன உறவு எனக்கு உள்ளது என்றால் எனக்கும், 2ம் வாதிக்கும் முதல் திருமணம் நடைபெற்று ஒரு வாரத்திலேயே அவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். எனக்கும் 2ம் வாதிக்கும் எந்த தேதி, மாதம் மற்றும் வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் தேதி, மாதம் மற்றும் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. எங்களுக்கு நடந்த திருமணத்திற்கு ஆதரமாக திருமண பத்திரிகையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்கணவர் சந்திரனை நான் எப்பொழுது திருமணம் செய்துகொண்டேன் என்றால் 10.2.2008.

3. மேற்படி சந்திரனுடன் நடந்த திருமணத்திற்கான ஆதாரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்களுடைய திருமணம் காதல் திருமணமா என்றால் எனக்கு நடந்த இரண்டு திருமணமும் பெரியவர்கள் பார்த்து செய்துவைத்த திருமணம்.

எனக்கும், 2ம் வாதி பாலமுருகனுக்கும் நடைபெற்ற திருமணத்தை விவாகரத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. வேலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். எனக்கும், 2ம் வாதி பாலமுருகனுக்கும் எந்த முறைப்படி திருணம் நடைபெற்றது என்றால் இந்து திருமண முறைப்படி நடந்தது.

4. சந்திரனுடன் நடைபெற்ற திருமணத்தின் பயனாக எங்களுக்கும் 1 மகன் மற்றும் 1 மகள் உள்ளனர். சாந்தாராணி என்பவர் என் அப்பாவின் அக்கா. சாந்தாராணி வாதிகளின் அம்மா ஆவார். சாந்தாராணி என்பவர் சேவூர் அங்கன் வாடியில் குழந்தைகளுக்கான சத்துணவு திட்டத்தில் ஆசிரியராக பணிபுரிந்தார். எனக்கும், 2ம் வாதி பாலமுருகனுக்கும் திருமணம் நடைபெற்ற போது 2ம் வாதி எங்கு வசித்தார் என்றால் சேவூரில் அனைவரும் வழக்கு சொத்தில் தான் ஒன்றாக வசித்து வந்தோம்.

5. எனக்கும், 2ம் வாதி பாலமுருகனுக்கும் முதலிரவு சோளிங்கர் பக்கத்தில் உள்ள சாந்தாராணியின் புதுவீட்டில் நடைபெற்றது. சாந்தாராணியின் வீடு தான் என்று யார் எனக்கு கூறியது என்றால் நானும் அங்கு குடும்பத்துடன் ஒன்றாக வசித்து வந்ததால் எனக்கு தெரியும். எத்தனை நாட்கள் அங்கு வசித்தோம் என்றால் 2 மாதம் இருந்தோம். இவ்வழக்கை வாதிகள் எதற்காக என்மீது போட்டுள்ளார் என்றால் வீட்டிற்காக போட்டுள்ளார்கள். எந்த வீட்டிற்காக போட்டுள்ளார்கள் என்றால் நான் தற்பொழுது இருந்துவரும் சேவூரில் உள்ள வீட்டிற்காக இவ்வழக்கிட்டுள்ளார்கள்.

6. எனக்கு 2ம் வாதி பாலமுருகனுக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு சாந்தாராணி தான் சேவூர் கிராமத்தில் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர்தான் வீட்டுவரி ரசீது, மின்சாரகட்டணம், குடிநீர் கட்டணம செலுத்தி வந்தார் என்றால் சரிதான். 1ம் வாதி பாபு சேவூரில் போட்டோ ஸ்டியோ நடத்தி வருகிறார் என்றால் சரிதான். திருநீலகண்டன் என்பவர் மாமியார் சாந்தாராணியின் கணவர். மேற்படி சாந்தாராணி சேவூரிலிருந்து பணியிடமாற்றம் பெற்று சோளிங்கரில் உள்ள தகரகுப்பம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடிக்கு மாற்றப்பட்டார்.

7. அங்கு சுமார் 6 வருடங்கள் அவர் வேலை பார்த்தாரா என்றால் சரியாக எனக்கு ஞாபகமில்லை. என்மீது இவ்வழக்கிடும் முன்பாக கடந்த 2.12.2010 -அன்று வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ48 அதுதான் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பினை நான் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டேன் அது தான் தற்பொழுது என்னிடம காட்டப்படும் வா.சா.ஆ49 அஞ்சலக ஒப்புகை அட்டை. அந்த அறிவீப்பிற்கு நான் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் நான் அனுப்பவில்லை என் தந்தை அனுப்பியிருப்பார். வா.சா.ஆ48 எதற்காக எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் நான் இருக்கும் வீடு அவர்களுடையது என்று என்மீது வழக்கிடுவதற்காக கொடுத்தார்கள்.

8. நான் குடியிருந்து வரும் வழக்கு சொத்து என்னுடையது தான் என்பதற்கு ஆவணங்களை ஏதேனும் வாதிகளிடம் நான் காண்பித்தேனா என்றால், என்பெயரில் உள்ள பட்டா, மின்கட்டண ரசீது, குடிநீர்வரி ரசீது ஆகியவற்றை காண்பித்தேன். சாந்தாராணியிடம் மேற்படி ஆவணங்களை நான் காண்பித்தேனா என்றால் காண்பித்துள்ளேன். என்னுடைய எதிர்வழக்குரையில் சந்திரனை நான் மறுமணம் செய்துள்ளேன் என்ற விவரத்தை குறிப்பிடடுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மறுமணத்திற்குரிய திருமண பத்திரிகையை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

9. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ3 வழக்கு சொத்தின் புலவரைபடம். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ1-ன் அசல் எங்கு உள்ளது என்றால் என்னிடம் உள்ளது. மேற்படி அசல் ஆவணத்தை கொண்டுவர தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ1-ன் அசலை தாக்கல் செய்யவேண்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.